**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 91 **நாள்:** 12.02.2026

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ், அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் உள்ள 4,044 கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை இன்று வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (12.02.2026) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், நீலாங்கரை, ஆர்.கே.கன்வென்ஷன் ஹாலில் நடைபெற்ற "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ், அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களுக்குட்பட்ட 27 கல்லூரிகளைச் சார்ந்த 4,044 கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட அன்னை வேளாங்கண்ணி பெண்கள் கல்லூரி, அன்னை வேளாங்கண்ணி மருந்தகக் கல்லூரி, செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கான செயின்ட் லூயிஸ் கல்லூரி, நர்சிங் பள்ளி, துர்காபாய் தேஷ்முக் பொது மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகிய கல்லூரிகளை சார்ந்த 387 மாணவர்கள், பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட ஜெருசலம் பொறியியல் கல்லூரி, ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சார்ந்த 700 மாணவர்கள்,

சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட கே.சி.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி, டி.ஜே. தொழில்நுட்ப நிறுவனம், சென்னை அறிவியல் மற்றும் கலை கல்லூரி, செங்கல்பட்டு, ஜேப்பியர் பொறியியல் கல்லூரி, தங்கவேலு பொறியியல் கல்லூரி, மிஸ்ரிமால் நவாஜி முனோத் ஜெயின் பொறியியல் கல்லூரி, சென்னை 2007 சி.எல். பெய்ட் மேத்தா மருந்தகக் கல்லூரி, 027 சி.எல். பெய்ட் மேத்தா மருந்தகக் கல்லூரி, மிஸ்ரிமால் நவாஜி முனோத் ஜெயின் கட்டடக் கலை பள்ளி, முகமது சதக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ராஜீவ் காந்தி சாலை-அறிவியல் மற்றும் மனிதநேயப் பள்ளி, நர்சிங் பள்ளி, மின் மற்றும் மின்னணுவியல் கல்லூரி, இயந்திரவியல் பள்ளி, முகமது சதக் ஏ.ஜே. மருந்தியல் பள்ளி, மேலாண்மை படிப்புகள் பள்ளி, மருந்தகக் கல்லூரி, உயிரி மற்றும் வேதியியல் பள்ளி, செயின்ட் ஜோசப் தொழில்நுட்ப நிறுவனம், செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி, தனராஜ் பெயிட் ஜெயின் கல்லூரிகளைச் சார்ந்த 2,957 மாணவர்கள் என மொத்தம் 27 கல்லூரிகளைச் சார்ந்த 4,044 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.அரவிந்த் ரமேஷ், தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர்கள் திரு.வி.இ.மதியழகன் (சோழிங்கநல்லூர்), திரு.எஸ்.வி.ரவிச்சந்திரன் (பெருங்குடி), மாமன்ற உறுப்பினர்கள், மண்டல அலுவலர்கள், கல்லூரி நிர்வாகிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**,